மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், காங்கயம்

<u>அசல் வழக்கு எண்.33/2025</u>

2026ம் ஆண்டு ஏப்ரல் 20ம் நாள் திங்கட்கிழமை வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு சட்டத்தின் ஏற்பாட்டின்படி திருமதி.கே.எஸ்.மாலதி, பி.ஏ., பி.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | தெய்வசிகாமணி | தொழில் | |
| த/பெ | | ஊர் | |
| வயது | | தாலூக்கா | காங்கேயம் |
| மதம் | இந்து | மாவட்டம் | திருப்பூர் |

<u>20.04.2026 வா.சா.3 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்துவைக்கப்பட்டு</u>

<u>1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. எனக்கு வாதி மற்றும் அவரது தகப்பனார் இரண்டாம் பிரதிவாதி ஆகியோர்களை தெரியும் என்றால் சரிதான். வாதியும் இரண்டாம் பிரதிவாதியும் தற்போது கரட்டு பாளையத்தில் தான் உள்ளார்கள் என்றால் ஆமாம். முதலில் அய்யம்பாளையத்தில் இருந்தார்கள் தற்போது கரட்டு பாளையத்தில் உள்ளார்கள் வீட்டிற்கு நான் சென்று உள்ளேனா என்றால் சென்றுள்ளேன். வாதியின் வீடு கரட்டு பாளையத்தில் எங்கே அமைந்துள்ளது என்றால் கரட்டுப்பாளையம் பேருந்து நிறுத்தத்திலிருந்து 100 மீட்டர் உள்ளே செல்ல வேண்டும்.

2. வாதி மற்றும் வாதியின் பெற்றோர்கள் ஒரே குடும்பமாக ஒன்றாக கரட்டுப்பாளையத்தில் வசித்து வருகிறார் என்றால் ஆமாம். அய்யம்பாளையத்தில் வழக்கு சொத்தில் 1ம் பிரதிவாதி தற்போது குடியிருந்து வருகிறார் என்றால் ஆமாம் கலைச்செல்வி சுமார் ஒரு 20

ஆண்டுகளாக அய்யம்பாளையத்தில் வசித்து வருகிறார். அய்யம்பாளையத்தில் உள்ள வீட்டில் பழைய கட்டிடத்தை புதுப்பித்து சிமெண்ட் சீட் அமைத்து அதில் கலைச்செல்வி குடியிருந்து வருகிறார் என்றால் ஆமாம். பழனிச்சாமியும், சுப்பராய கவுண்டரும் அய்யம்பாளையத்தில் எந்த கதவு எண் கொண்ட வீட்டில் குடியிருந்து வந்தார்கள் என்பது எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. மேற்படியார்களின் தகப்பனார் மாரியப்ப கவுண்டர் எங்கு வசித்து வந்தார் என்பது எனக்கு தெரியுமா என்றால் அவர்கள் சொந்த ஊர் இடைக்காட்டு வலசு அங்கிருந்த காடு, தோட்டங்களை விற்றுவிட்டு அவர்கள் அய்யம்பாளையத்திற்கு வந்து விட்டார்கள். மாரியப்ப கவுண்டர் எப்போது அய்யம்பாளையம் வந்தார் எங்கு வந்து குடியேறினார் என்பது உள்ளிட்ட விவரங்கள் நான் மேற்படி சமயத்தில் பிறக்காத காரணத்தினால் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

4. பழனிச்சாமி மற்றும் சுப்பராய கவுண்டர் ஆகியோர்கள் எப்போது இறந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் சுமார் பத்து ஆண்டுகள் இருக்கும். பழனிச்சாமியும், சுப்பராய கவுண்டரும் தங்களுக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை பொறுத்து எப்போது பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 25 ஆண்டுகளுக்கு முன்பு பாகம் பிரித்துக் கொண்டார்கள். அந்த விபரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் ஊர் கவுண்டர் கூட்டம் பெரியவர்கள் சேர்ந்து பாகம் செய்து வைத்தார்கள்.

5. அந்த விபரம் எனக்கு தெரியும் யார் யார் பாகம் செய்து வைத்தார்கள் என்றால் பெரியசாமி கவுண்டர் என்ற ஒருவர் பாகம் செய்து வைத்தார்

அவர் தற்போது உயிருடன் இல்லை. வழக்கு சொத்திற்கான பட்டாவை நான் பார்த்தது இல்லை என்றால் சரிதான். கலைச்செல்வி மற்றும் அவரது சகோதரரான 2ம் பிரதிவாதிக்கிடையே என்ன பத்திரங்கள் ஏற்படுத்திக் கொள்ளப்பட்டுள்ளது என்பதை பொறுத்து எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

6. சுப்புராய கவுண்டரின் பெண்மக்கள் அவரின் சொத்துக்களை விற்பனை செய்து விட்டதாக நான் சொல்லியுள்ள சங்கதிகள் பொறுத்து நான் ஆவணங்கள் ஏதேனும் பார்த்துள்ளேனா என்றால் ஆவணங்களை பார்த்ததில்லை ஆனால் விவரம் தெரியும். சுப்பராய கவுண்டரின் பெண்மக்கள் அவரின் சொத்துக்களை யாருக்கு விற்பனை செய்தார்கள் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தாண்டாம்பாளையத்தைச் சேர்ந்த ஒரு நபருக்கு விற்பனை செய்தார்கள் தற்போது பெயர் ஞாபகம் இல்லை.

7. மாரியப்ப கவுண்டர் என்பவர் அய்யம்பாளையத்தில் வசிக்கவே இல்லை என்றும் அவர் அய்யம்பாளையத்தில் வசித்து வந்ததாக நான் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. மாரியப்ப கவுண்டர் என்பவர் இடைக்காட்டுவலசில் தான் குடியிருந்து வந்து அங்கேயே காலமாகிவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. மாரியப்பகவுண்டருக்கும் அய்யம்பாளையத்தில் உள்ள சொத்துக்களுக்கும் எந்த விதமான சம்பந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

8. வாதிக்கும், எனக்கும் எத்தனை ஆண்டுகளாக பழக்கம் என்றால் சுமார் 10 ஆண்டுகளாக பழக்கம். வாதி கேட்டுக்கொண்டதன் அடிப்படையில் நான் அவருக்கு ஆதரவாக தவறுதலாக எனது முதல்

விசாரணை சாட்சியத்தை தாக்கல் செய்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. தாவா சொத்துக்கள் 1, 2 பிரதிவாதிகளின் தகப்பனாருக்கு தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. எனது சாட்சியம் நிராகரிக்கத்தக்கது என்றும் வழக்கு தள்ளுபடியாகத்தக்கது என்றும் சொன்னால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் சரிபார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கைரேகை செய்தும்/கையொப்பம் செய்தும் ஒப்புக்கொள்ளப்படுகிறது.

K S MALATHI

Digitally signed by K S MALATHI
Date: 2026.04.20 18:49:27 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி, காங்கயம்